23.10.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண்.196/2019 ) திரு.ராஜகுரு.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1) பி.வா.சா.ஆ.1 ஆவணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் அனுப்பிய குறிப்பாணை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதற்கான முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து யார் செய்தார்கள் அவரின் சீல், பெயர் இல்லை என்றால் சரிதான். 05.11.2008 ல் கந்தசாமி நாயக்கர் மனு எதுவும் கொடுத்தாரா அந்த மனுவின் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் எனது தகப்பனார் வட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்காவது தபசில் சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கந்தசாமி நாயக்கர் யாருக்கு எதிராக மனுக்கொடுத்தார் என்பதும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் துலங்காது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் தேவையற்ற ஆவணம் என்றும் சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3,4 பட்டா ஆவணத்தில் கந்தசாமி நாயக்கர் பெயரில் உள்ளது 06.11.2024 இணையதள பதிவிறக்க நகல் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு எனது அப்பா கந்தசாமி நாயக்கர் பெயரில் எந்த ஆண்டு எந்த உத்தரவின் அடிப்படையில் ஏற்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். நான் சொல்லுவது போன்று எந்த உத்தரவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ன்படி எனது அப்பா கந்தசாமி நாயக்கர் 20.10.2017 அன்று காலமாகி விட்டார் என்றால் சரிதான். எனது அப்பா இறக்கும் வரை தாவாச்சொத்திற்கு எனது அப்பா அனுபவித்து வந்தார் என்று காட்டுவதற்கு அப்பா பெயரில் தீர்வை ஏற்பட்டதாகவோ, சாகுபடி அடங்கலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் பட்டா என்னிடம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. யார் சாகுபடி செய்து கொண்டியிருக்கிறார்களோ அவர்கள் பெயருக்குதான் சாகுபடி அடங்கல் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

2) எனது அப்பா இறந்து 7 வருடங்கள் கழித்து எனது அப்பா பெயருக்கு பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீது செலுத்தியதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோனவர் பெயரில் 7 வருடங்கள் கழித்து தீர்வை ரசீது வருவாய் நிலைக்கட்டளையின் பேரில் செலுத்த முடியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீதில் பணம் செலுத்துபவர் பெயரில் தான் தீர்வை ரசீது போடப்பட்டுள்ளதாக காலம் எண்.1ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீதில் பணம் செலுத்துபவர் கையெழுத்து காலம் எண்.6ல் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீது வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்ட ரசீது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 எந்த கிராம நிர்வாக அலுவலகத்திலிருந்து தீர்வை ரசீது போடப்பட்டுள்ளது என்ற பெயரும், சீலும் இல்லை என்றால் சீல் மட்டும் உள்ளது காணப்படும் முத்திரையை வைத்து எந்த கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். அந்த ரவுண்ட் சீல் மேலும்,கீழுமாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீது எந்தக்காலத்திலும் சரவணாபுரம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீதை தவிர தவாச்சொத்தை அனுபவத்ததாக சொல்லுவதற்கு வேறு ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லட்சுமியம்மாள் விருப்பப்பட்டதால் எங்கள் தாத்தா சிதம்பரம்பட்டியில் வாழவைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனது அப்பா சொல்லி தெரியும் என்று சொல்லியுள்ளேன். லட்சுமியம்மாளுக்கு வீடு வாங்கி கொடுத்தாக சொல்லும் வீடு எங்கு உள்ளது அதனுடைய கதவு எண் அது தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் கதவு எண், எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது எனக்கு தொடர்பில்லை எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.
திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.10.2025.